தேவர் ஜெயந்தியை முன்னிட்டு, திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள "பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும் – திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கே. என். சேகரன், சபியுல்லா, லீலாவேலு, பகுதி செயலாளர் இ.எம். தர்மராஜ், மணிவேல், சிவகுமார், ஒன்றிய செயலாளர் கே. எஸ். எம். கருணாநிதி, கங்காதரன், ராஜேந்திரன், நகர செயலாளர் காயாம்பு, பேரூர் செயலாளர் தங்கவேல், மாநில – மாவட்ட – மாநகர நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள், மாவட்ட – மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், தீபாவளி முன்னெச்சரிக்கை தீக்காய சிறப்பு சிகிச்சை பிரிவில் ஆய்வு மேற்கொண்டு, அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளிகளை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். இந்நிகழ்வில் மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி கூடுதல் இயக்குநர் மரு.சாந்தாராமன், அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.லியோ டேவிட், தீக்காய சிகிச்சை பிரிவு துறைத்தலைவர் மரு.நெல்லையப்பர், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.பாஸ்கரன், நிலைய மருத்துவ அலுவலர் மரு. வாணி மற்றும் மருத்துவத்துறை பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு – தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலை!

எழும்பூர் தெற்குப் பகுதியில் கருத்தியல் பேச்சரங்கம்!

சுப.வீரபாண்டியன் – ம.மோகநிதி – செ.ஜோதி சிறப்புரை!

பகுதிச் செயலாளர் வி.சுதாகர் தலைமை!

சென்னை, நவ.2-

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதி சார்பில், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் "என் உயிரினும் மேலான" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் பட்டைத் தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் பங்கேற்கும் கருத்தியல் தொடர் பேச்சரங்கத்தில் திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன், இளம் பேச்சாளர்கள் ம.மோகநிதி, செல்வி. செ.ஜோதி உரையாற்றுகிறார்கள்.

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதி சார்பில், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் "என் உயிரினும் மேலான" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பேச்சு போட்டியில் பட்டைத் தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் பங்கேற்கும் கருத்தியல் தொடர் பேச்சரங்கம், இன்று (02.11.2024, சனிக்கிழமை) மாலை 6.00 மணிக்கு சென்னை, டவுட்டன், ரித்தர்ட்டண்ட் சாலையில் உள்ள ஒய்.எம்.சி.ஏ.திடலில், சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், டாக்டர் பி.எம்.யாழினி, சொ.வேலு எம்.சி, கே.எஸ். ரவிச்சந்திரன், கோ.ஏகப்பன், பா.ஸ்ரீராமுலு எம்.சி., கே.எஸ். எம்.நாதன், நிர்மலா தேவி, பரிதி இளம் சுருதி, எல்.சுந்தர் ராஜன், பாத்திமா முசாபர் எம்.சி, எஸ்.ரசூல், டி.வி.வேலு, எம். மலர்மாறன், கோ.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், ஆர். பாபு என்ற சந்திரசேகரன், எஸ்.டால்பின்ஹரி, இ.மொய்தீன், வான்மதி கதிரவன் ஆகியோர் முன்னிலையில்,

திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன், இளம் பேச்சாளர்கள் ம.மோகநிதி "தத்துவமே எங்கள் தனித்துவம்" என்ற தலைப்பிலும் செல்வி.செ.ஜோதி "சமத்துவப் பாதையில் சமூக நீதி" என்ற தலைப்பிலும் உரையாற்றுகிறார்கள்.

இப்பேச்சரங்கத்தில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: இ.பரந்தாமன், ப.தாயகம் கவி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல் மாநில நிர்வாகிகள்: முன்னாள் எம்.எல்.ஏ., கே.எஸ்.இரவிச்சந்திரன்இ பி.கே.மூர்த்தி எம்.சி, சே.சந்துரு, சி.மகேஷ்குமார், முன்னாள் எம்.எல்.ஏ.,சங்கரிநாராயணன், முன்னாள் எம்.எல்.ஏ., எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த், பரிதி இளம்சுருதி எம்.சி, எல்.பி.எப்.ஆர்.வரதன், வழக்கறிஞர் இந்திரஜித். மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகோதேவன், எ.புனிதவதி எத்திராசன், எம்.சி, இசட் ஆசாத் எம்.சி. மண்டலகுழு தலைவர்கள்: சொ.வேலு எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி, பா.ஸ்ரீராமுலு எம்.சி, டாக்டர். ஜி.சாந்தகுமாரி எம்.சி. பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர். பொதுக்குழு உறுப்பினர்கள்: எஸ்.பன்னீர்செல்வம், கோ. மணி, பி.ஜெ.துளசிங்கம், பி.உதயசங்கர், ரமேஷ்(எ) நீல கண்டன் எம்.சி, எம்.இப்ராஹிம்கனி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, அ.நிர்மலாதேவி, இரா.கலைச்செல்வி. மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: டி.லோகேஷ், ஜெ.பால முருகன், பா.ஜெகதீஷ், க.விநோத், எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர் நானா, நா.துலுக்காணம், எல்.பி.எப்.மோகன், துரை கண்ணன், ஜி.தாமோதரன், ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, எம்.பெரோஸ்கான், பி.விஜயகுமார், எம். விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், க.பா.பிரதீப்குமார், கு.கிருஷ்ண மூர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, து.ஆயிரம், இரா.வீரமணி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள்: வட்ட நிர்வாகிகள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

இப்பேச்சரங்கத்தில் ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., வி. விஜயகுமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

ரயில்களில் முன்பதிவுக்கான

கால அவகாசம் 60 நாட்களாக குறைப்பு!

புதிய விதிமுறை அமலுக்கு வந்ததாக ரயில்வே நிர்வாகம் அறிவிப்பு!

சென்னை,நவ.2-

ரயில்களில் முன்பதிவுக்கான கால அவகாசம் 60 நாட்களாக குறைக்கும் நடைமுறை அமலுக்கு வந்துள்ளது.

ரயில்களில் பண்டிகை காலம் தொடங்கி சாதாரண ரிசர்வேஷன் வரை அனைத்திற்கும் 120 நாட்கள் முன்னரே பதிவு செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டு வந்தன. இனி, 60 நாட்கள் முன்கூட்டி மட்டுமே ரயில் டிக்கெட் முன்பதிவு செய்து கொள்ள முடியும். இந்த புதிய விதிமுறை இன்று முதல் வந்துள்ளதாக ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதற்கு முன்னதாக 120 நாள் முன்கூட்டியே ரயில் டிக்கெட் புக் செய்திருப்பவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. நேற்று வரை முன்பதிவு செய்யப்பட்ட, 60 நாட்களுக்கு மேலான ரயில் டிக்கெட்டுகளை ரத்து செய்ய அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

ரயில் டிக்கெட் முன்பதிவு அவகாசம் 60 நாட்களாக குறைப்பு

ரயில்களில் பண்டிகை காலம் தொடங்கி சாதாரண ரிசர்வேஷன் வரை

அனைத்திற்கும் 120 நாட்கள் முன்னரே பதிவு செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டு வந்தன

இனி, 60 நாட்கள் முன்கூட்டி மட்டுமே ரயில் டிக்கெட் முன்பதிவு செய்து கொள்ள முடியும் இந்த புதிய விதிமுறை இன்று முதல் வந்துள்ளது இதற்கு முன்னதாக 120 நாள் முன்கூட்டிய ரயில் டிக்கெட் புக் செய்திருப்பவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது நேற்று வரை முன்பதிவு செய்யப்பட்ட, 60 நாட்களுக்கு மேலான ரயில் டிக்கெட்டுகளை ரத்து செய்ய அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

வணிகப் பயன்பாட்டிற்கான

சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வு!

சென்னை.நவ.2-

வணிகப் பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 61 ரூபாய் 50 காசுகள் உயர்ந்துள்ளது.

சர்வதேச சந்தையில் நிலவும் கச்சா எண்ணெய் விலைக்கு ஏற்ப, சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயித்து வருகின்றன. அந்த வகையில் ஒவ்வொரு மாதமும் 1ம் தேதி எண்ணெய் நிறுவனங்கள் புதிய விலையை நிர்ணயித்து அறிவிக்கின்றன. அதன்படி. இந்த மாதத்திற்கான விலை மாற்றம் குறித்த பட்டியில் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி

சென்னையில் வர்த்தக பயன்பாட்டுக்கான 19 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 61 ரூபாய் 50 காசுகள் அதிரடியாக உயர்ந்து ஆயிரத்து 964 ரூபாய் 50 காசுகளாக விற்பனை செய்யப்படுகிறது. 14 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு எந்த மாற்றமும் இல்லாமல் 818 ரூபாய் 50 காசுகளுக்கு விற்பனையாகிறது.